பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

09 11 2025 SUNDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்ராகண்டில் சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. பீகார் சட்டப்பேரவைக்கான இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

3. ஆஸ்திரேலியாவுடனான வர்த்தக ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. கச்சா எண்ணெய் சுத்திகரிப்பில் உலகின் முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

5. உலக துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்ராகண்டில் சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

இன்று டேராடூன் செல்லும் அவர், உத்ராகண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டதன் 25வது ஆண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்பு தபால்தலையையும் அவர் வெளியிடுகிறார்.

அதனைத் தொடர்ந்து. 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் அவர், 930 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவடைந்த திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார்.

குடிநீர், கல்வி, எரிசக்தி, நீர்ப்பாசனம், விளையாட்டு, திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் பல்வேறு திட்டப் பணிகளை பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 62 கோடி ரூபாயை 28 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் திரு. நரேந்திர மோடி விடுவிக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

இரண்டு நாடுகள் அரசுமுறைப் பயணத்தின் முதல்கட்டமாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, நேற்றிரவு அங்கோலா சென்றடைந்தார்.

இருநாடுகளும் 40 ஆண்டுகள் தூதரக உறவுகளை கொண்டுள்ள நிலையில், அங்கோலா அதிபர் திரு. Joao Manuel-லுடன் திருமதி. திரௌபதி முர்மு, இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்நாட்டு பயணத்தின் போது, அங்கோலா நடாளுமன்றத்திலும் திருமதி. திரௌபதி முர்மு உரையாற்றவுள்ளார்.

இந்தியாவின் குடியரசுத்தலைவர் ஒருவர் அங்கோலா செல்வது இதுவே முதல்முறையாகும்.

>>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், கர்நாடகாவில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

சரவண பெலகுலாவில் நடைபெறும் சமணத் துறவி சாந்தி சாஹர் மகராஜின் புகழஞ்சலி நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

அவரது சிலை திறப்பு நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

மைசூரில் உள்ள கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கவுள்ளார்.

இந்த பயணத்தின் போது, கத்தூர் மடத்திற்கு செல்லும் அவர், மைசூர் அருகேயுள்ள சாமுண்டீஸ்வரி ஆலயத்தில் வழிபாடு நடத்தவுள்ளார்.

>>>>>><<<<<<

பீகார் சட்டப்பேரவைக்கான இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

அம்மாநிலத்தின் 122 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனையொட்டி, அரசியல் கட்சித் தலைவர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுடனான வர்த்தக ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள அவர், மெல்போர்னில் அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. Andrew Giles-சுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து நேற்று பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே விரிவான பொருளாதார ஒப்பந்தங்கள் குறித்து இந்த பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கச்சா எண்ணெய் சுத்திகரிப்பில் உலகின் முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் 23 உலகத் தரம் வாய்ந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவற்றின் சுத்திகரிப்பு திறன், ஆண்டுக்கு 258 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2030ஆம் ஆண்டுக்குள் இதனை 330 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 64 புள்ளி ஏழு மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாகவும் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நகர்ப்புற மேம்பாட்டில் நிலையான நடைமுறைகளை செயல்படுத்த மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், நகர்ப்புற மேம்பாட்டிற்கு அரசு மற்றும் தனியாரின் கூட்டு முயற்சிகள் அவசியம் என்று கூறினார்.

2047ஆம் ஆண்டிற்குள் நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை, 50 சதவீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில் கொண்டு, உரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இதற்கு தனியார் துறையின் பங்களிப்பும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, நகர்ப்புற மேம்பாடும், அவற்றின் தூய்மையும் அவசியமானது என்று திரு. மனோகர் லால் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியாவும், பொலிவியாவும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்துள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரிட்டா கூறியுள்ளார்.

அரசு முறைப் பயணமாக அந்நாட்டிற்கு சென்றுள்ள அவர். அங்குள்ள தொழில் துறையினருடன் ஆலோசனை நடத்தினார்.

நகர்ப்புற வளர்ச்சி, கலாச்சாரம், யோகா, கனிமவளம், மருந்து, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரிடையேயும் அவர் கலந்துரையாடினார்.

அங்கு புதிதாக கட்டப்பட்டுள்ள இந்திய தூதரகத்தையும் திரு. பபித்ரா மார்க்கரிட்டா திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

ஆர்.எஸ்.எஸ் இயக்கம், தேச ஒற்றுமைக்காக தொடர்ந்து பாடுபட்டு வருவதாக அதன் தலைவர் திரு, மோகன் பகவத் கூறியுள்ளார்.

பெங்களூருவில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், உலகின் எந்தவொரு அமைப்பையும் விட, இது தனித்துவமாக திகழ்கிறது என்று தெரிவித்தார்.

இந்த அமைப்பு யாருக்கும் எதிரானது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் அதிகாரத்தை இலக்காக கொண்டு ஆர்.எஸ்.எஸ் இயக்கம் செயல்படவில்லை என்றும், மக்கள் நலனும் தேசபக்தியுமே இந்த இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் என்றும் திரு. மோகன் பகவத் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான வேலைவாய்ப்பு திட்டம், தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடர்பாக, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பின் சார்பில், நாமக்கல்லில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – கண்ணன் 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

உலக துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் குழுப் பிரிவில் ரவீந்தர், கமல்ஜீத், யோகேஷ்குமார் அடங்கிய அணி வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

மகளிர் 10 மீட்டர் பிரிவில் இளவேனில் வாலறிவன் வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

சர்வதேச ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி, ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் கனடாவின் Sahil Nayyar-ஐ வென்றார்.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், அவர் அடுத்த சுற்றில் மலேசியாவின் Thor Chuan-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்னாந்தா, ஹரிகிருஷ்ணன், அர்ஜுன் எரிகேஸி மற்றும் பிரணவ் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கோவாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், மற்றொரு இந்திய வீரர் குகேஷ் மூன்றாவது சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார்.

>>>>>><<<<<<

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ஆசியான் தனிநபர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வி.எஸ் ராகுல் பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

உலக Pickle Ball சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Aman Patel தங்கப்பதக்கத்தையும், Dev Shah வெள்ளிப்பதக்கத்தையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் Nilesh இணை வெண்கலப்பதக்கத்தையும் வென்றன.

>>>>>>END<<<<<<